# கல்வாரி பயணம்

இயேசு - இவர்
விண்ணரசின்
விலாசம்
ஆதாம் விதைத்த
பாவ விதைகளை
வேரோடு பிடுங்கி எறிய
புறப்பட்டு வந்த புதிய ஆயுதம்
ஆதி பெற்றோர் பாவத்தை
ரத்தத்தில் சலவை செய்தவர்
யூதர்களின் வேள்வியில்
சத்தியத்தின் தீக்குளிப்பு
சிலுவை என்பது
தனி ஒரு மனிதனுக்கான
தண்டனை அல்ல
அது விடியலை தேடும்
மானுடத்தின்
மொத்த விலாசம்
மீட்பின் சாசனத்தில்
தன் காயங்களால்
கையெழுத்திட்ட இயேசுவை
அவர் சுமந்த சிலுவையை
சிறிது சிந்திப்போம்..
விவிலிய பக்கங்களில் இது
இரணத்தோடு வாசித்த சங்கீதம்.

1.
இயேசுவுக்கு மரணதீர்வை
நீதி தராசின் முள்ளே
நெஞ்சில் குத்திய கதை
ஒளியை இருளிடம்
காட்டி கொடுத்த
யூதாஸின் முத்தம்
இயேசுவை கொன்ற
முதல் அம்பு
குருட்டு தனமாய்
குடிகொண்டிருந்த
குரூரத்திட்டம்
ஒரு புறாவை
கூண்டேற்றியது
சதுசேயர்கள் முன்மொழிய
பரிசேயர்கள் வழிமொழிய
குற்றவாளியாய்
யூதர்களின் அரசர்
வார்த்தையானவர்
மௌனமாக நின்றார்
குற்றத்தை தேடினான்
ரோம ஆளுனன்
வழக்கில் சந்தித்த
சந்தர்ப்பவாதங்கள்
சறுக்கி விழுந்துவிட்ட
சாட்சியங்கள்
முண்டாசு
கட்டிக் கொண்டுதிரியும்
முரண்பாடுகள்
முதுகெலும்பில்லாத
பிலாத்துவின் தீர்ப்பு
விலக்கப்பட்டகல்லை
விலக்கிவைப்பதாக
நினைத்து விலங்கிட்டு
குற்றம் ஒன்றுமில்லையென்று
சாவுக்கு கையளித்தான்
விசித்திரமான
விவிலிய வழக்கு
இயேசுவின் மீது
வழக்கு போட்டவர்கள்
தீர்ப்பு வந்ததும்
தெரிந்து கொண்டார்கள்
இயேசுதான் நீதிபதி என்று
கோலை யூத சட்டத்தின் கலை
கலகம் அவர்கள் உலகம்
ராட்சச நகங்கள்
ரட்சகரை காயப்படுத்தின

யூத கழுகுகள்
வெள்ளை புறாவை
கொத்த தொடங்கின
தேவமகனை சவுக்கால்
அடித்தார்கள்
வானத்தை
மின்னல் கிழித்து விட முடியாது
துரோகங்கள்
நியாயங்களை வென்றது
–
அதை இயேசுவின்
காயங்கள் சொன்னது.

2.
*சிலுவை சுமத்தினார்கள்*
சூரியன் மேல் சிலுவை
சுமத்தியது
–
ஒரு
விடியல் காலத்து
விளக்கு
நொறுக்கப்பட்ட உடலோடு
நசுக்கப்பட்ட காயங்களோடு
தேவ செம்மறி
சிலுவை சுமந்தது
ஜெருசலேம் உள்ளே
அரசரே வாழி
யென்றது
வாழ்த்து பாடியது
வரவேற்றது
மறுநாள்
சிலுவையலறையும்
கூக்குரலிட்டது
மரண கைதியாக்கி
ஜெருசலேம் வெளியே
நாடு கடத்தியது
நன்றியுள்ள யூத இனம்
ஜெருசலேமே ஜெருசலேமே
உன்னிடம் வரும்
இறைவாக்கினருக்கெல்லாம்
இது தான் கதியா!
இதனால் தான் இவர்
பிறந்த பொழுதே
கலங்கினாயா !
ஆரம்பமானது
இரட்சணிய அரங்கில்
சிலுவை பயணத்தின்
சரித்திர ஊர்வலம்
அருவியின் பயணம்
ஆற்றை நோக்கி
ஆற்றின் பயணம்
கடலை நோக்கி
இயேசுவின் பயணம்
தந்தையை நோக்கி
தந்தையின் விருப்பம்
கல்வாரி நோக்கி
பயணம் தொடர்வோம்
பாதங்களுக்கு கீழே பூக்கள்
இல்லை
சிதறி கிடப்பவை பாவமுட்கள்
ரத்தம் துடைத்து நடந்து வருவோம்

3.
*முதன் முறை கீழேவிழுதல்*
ஜெருசலேம் வீதிகள்
இயேசுவின் பாத ரேகைகளை
பதிவு செய்தன
இயேசு
கீழே விழுந்தார்
விழுந்த மானிடத்தை
தூக்கி விட
பூமி தன் படைத்தவரை
ஆரத்தழுவியது
அருகில் சென்று பாருங்கள்
அவர் காயங்களில்

நம் பாவங்கள் தெரியும்
அந்த ரத்த துளிகள்
வேர்விட்டு
பூமியைப் பிளக்கும்
காலம் நடந்தது
கடுந்தவம் தொடர்ந்தது

4.
*தாயை சந்தித்தல்*
கண்ணே தன்
கண்மணியைக் கண்டதும்
கன்று தவிப்பது போல் தாய்
கலங்கினாள்
புலம்பினாள்
இயேசு
சிலுவை சுமந்த பொழுது
இவளுக்கு
இதயம் வலித்தது
சமாரியப்பெண்கிணற்றருகே
உயிருள்ள நீரைக்கண்டாள்
தாயே நீ இங்கு
குருதிப்புனலாய் காண்கிறாய்
உன் மனத்துயரங்களை
சொல்லி அழ
வார்த்தையில்லை
கானாவூரில்
நீ உரைத்ததால்
நீர் இரசமாய் மாறியது
கல்வாரியில் உன்முன்னே
இரத்தமாய் வழிகிறது
ஈர நினைவுகளை தன்
இதயத்தில் உரசி
இரத்தமாய் கரைத்திருந்தாள்.
தனிமரமாய்
சிலுவை தொடர்ந்தாள்
துயரம் சுமந்து
கண்களும்
இதயமும் கலங்குகின்றது.

5.
*சீமோனின் உதவி*
தந்தையின் விருப்பத்தை
பொறுப்புடன் உணர்ந்தவர்
பூகம்பத்தை சுமந்தார்
உடல் தள்ளாடிய பொழுது
சீமோன் தோள் தந்தார்
சீமோனின் தோள்கள்
பாக்கியம் பெற்றவை
அவர் நடந்த வீதிகள்
தவம் செய்திருந்தன
அடியார்க்கு
அடியவர் செய்த தொண்டு
சீமோனோடு தோள் கொடுப்போம்
நம் அகங்காரத்தை விட்டுவிட்டு

6.
*வெரோனிகா முகம் துடைத்தல்*
வாய் பேசும் மொழியை விட
காயம் பேசும் மொழி
கனமானது
அருள் வடியும் திருமுகத்தில்
பச்சை ரத்தம் வடிந்தது
எங்கிருந்தோ வந்தாள்
வெரோனிகா எனும் சிரோன்மணி
திருவடியை தொழுது
திருமகனின்
திருமுகத்தை துடைத்தாள்
இயேசுவின்
இரத்தத்தில் தன்னை சுத்தப்படுத்தி
திருமுகத்தை பதிவு
செய்து கொண்டது துணி
கண்ணீரால் கழுவப்பட்ட
கண்களுக்குத்தான்
திருமுக தரிசனம் கிடைக்கும்
புயலின் நடுவில் - இது



ஒரு பூவருடல் தான்

7.
*இரண்டாம் முறை கீழேவிழுதல்*
கடலில் நடந்த
கால்கள் - சிலுவையுடன்
இரண்டாம் முறை
தடுமாறியது.
ஞானத் திருமேனி
மண்ணில் விழ
பூமி சிலிர்த்தது
வானம் திகைத்தது

காற்று திசை மறந்தது
புயல் ஒன்றில்
பூ ஒன்று நிலைமாறியது
பிலாத்துவின் தீர்ப்பு
வார்த்தை பிரளயமாகி
நோவாவின் பேழையை
மூழ்கடித்து விட்டது
இயேசுவின் இரத்த வேர்வைக்கு
ஒரு
விலை யிருந்தது
அது நம் பாவம்
அவர் அன்பிற்கு ஒரு நிழலிருந்தது
அது நம் மோட்சம்
மெல்ல எழுந்து
பயணம் தொடர்கிறது

8.
*பெண்களுக்கு ஆறுதல்*
சூழ்ந்து நின்ற மகளிர்
சுருதி சேரமுடியாத
சோக ராகங்களில்
அழுகின்ற மகளிர்க்கு ஆறுதலாக
காயங்களால் ஒத்தடம்
கண்ணீர் மலர்களுக்கு
தென்றலாய் உபதேசம்
வாடிய பயிர்கள் எழுந்து நிற்க
விடியல் வார்த்தைகளை
விதைகளாக தூவினார்
கவலைகளை தூக்கிக்கொண்டு
திரியாதீர்கள்
தனக்குள்
தான் கரைந்து
தன்னையே தேடு என்றார்
இயேசு உரைத்தது
மகளிர்க்கு உறைத்தது
நெஞ்சத்தை கரைத்தது
நண்பகல் நேரம்
நகர்புற மகளிர்
மௌனமாய் அழுது
பின் தொடர்ந்தனர்

9.
*மூன்றாம் முறை விழுதல்*
உண்மையின்
ஊர்வலத்தில்
பொய்களின் பள்ளங்கள்
மூலைக்கல் ஒன்று
சிலுவையுடன்
இடறிவிழுந்தது
மூன்றாம் முறையாக
உள்ளங்காலை
முத்தமிட்ட பூமி
உயிருள்ள நீரை
ஏந்தியது
உள்ளிருக்கும்
ஊற்றுக்கண் திறந்தது
சிலுவையை தோளில் சுமந்தார்
கருணையை கண்களில் சுமந்தார்
இரத்த துளிகள்
சிவப்பு கம்பளமாய்
விரித்திருக்க
கல்வாரி அடைந்தார்

பாதம் பதித்த மண்ணை தொட்டு
வேதம் படிப்போம்

இதுவே வழி
இதுவே ஒளி

10
*ஆடைகளை களைகிறர்கள்*
கல்வாரி - ஒரு
அதிசயமான மலை
இங்கே மரணத்திற்கு பின்தான்
வாழ்வு - முடிவில்லா
வாழ்வு - மரணமில்லா
பெரு வாழ்வு
இயேசு
தான் வடித்த குருதியில்
சிவப்பானவர்
உலகை சிவந்து விழிக்கும்
உரிமையுள்ளவர்

தீயின்
சிவப்பு ஆடையை
கழற்றினார்கள்
காயம் பட்ட உடலிலிருச்து
ரத்தம் கசிந்தது
அனைத்தும் பங்கிட்டாலும்
தையல் இல்லாத ஆடைக்கு
குலுக்கு சீட்டு போட்டனர்
ஆடையை தொட்ட பெண்
குணமானாள் - இவர்
ஆடையை பெற்ற வீரன்
என்னவானன்?

11.
*சிலுவையில் அறைந்தனர்*
சிலுவையே
உன்னை இயேசு சுமந்ததும்
பின்னர் நீ அவரை சுமந்ததும்
மீட்பின் திருப்புமுனை
நீ மனிதரை
கூடிவாழ சொல்லுமொரு
கூட்டல் குறி
இன்று சிலுவையின்
பிரவாகம் கண்டு
பிரமிக்கலாம் ஆனல்
இந்த ஜீவநதி
பாலைவனபாறைகளின் இடுக்கில்
கசிந்துதான் இறங்கி வந்தது
கறுத்த மேகங்கள்
கழுத்து சுளுக்க
அண்ணாந்து பார்த்தது
நிமிர்ந்த சிலுவையை
இவர்களை மன்னியும்
என்ற உன்வேண்டுதலை
வானம் நகலெடுத்து
நீ கல்வாரி மலையில்
நின்ற பிறகு தான்
வலது கள்ளன்
வானரசு கண்டான்
உன்னால் தான்
தாய் எங்களுக்கு
அறிமுகம் ஆனாள்
தந்தை உன்னை
கைவிட்டதும்
உயிருள்ள நீர்
தாகம் என்றதும்
காடியை சுவைத்து
எல்லாம் முடிந்ததென
ஆவியை தந்ததும்
விவிலிய பக்கங்களில்
இன்னும் ஈரத்தோடு துடிக்கும்
ஒரு இதயத்தின் குரல்

12.
*இயேசு மரித்தார்*
லாசரை உயிர்ப்பித்த

இயேசு மரித்தார்
காற்று மரித்ததாய்
சரித்திரம் ஏது?
இயேசுவின் உடலை
ஈட்டியால் குத்துகின்றான்
வானம் விசும்புகிறது
தண்ணீரும் இரத்தமும்
கல்வாரியில்
தேங்கிகிடக்கின்றது
உன்னால் கல்வாரி
ஞானஸ்தானம் பெற்றது
நீரால் அல்ல உன்
இரத்தத்தால் - தந்தையின்
சித்தத்தால்
உயிர் பிரிந்த
யுகப் பறவையே!
உன் பிரிவுகண்டு
கண்ணீர் கசிகிறது.
இயேசுவே
–
நீ
இறந்தபொழுதுதான்
இறைமக்கள் இங்கே
கல்லறையில் எழுந்து
உட்கார்ந்தார்கள்

வானம் கறுத்தது
வெளிச்சம் சிறுத்தது
முகில் இடித்தது
நிலம் அதிர்ந்தது
தூரத்தில் ஒரு செந்தூரியன்
இயேசுவை இனியவர்
என்று சுவைத்தான்
ஞானத்தின் சுவை இதுவோ.

13.
*தாயின் மடியில்*
காற்றும் மகன்மீது
கடுமையாக வீசாமல்
காத்த கன்னி மரி
கசிந்தாள்
கனிந்தாள்
கரைந்தாள்
பனித்துளியாக
அந்த
பனித்துளியின் மீது
சூரியனை கிடத்தினார்கள்
மலரை செடி மீண்டும்
ஏந்தியது
உறக்கம் கலையாமல்
முத்தமிடும் தாய் போல்
முத்தங்களால் மகனின்
இமையை மூடினாள்
தொழுவத்தில் தொட்டிலில்
தாய்ப்பால் மணக்கும்
தாலாட்டு
கல்வாரியில் கைகளில்
கண்ணீர் கதறல்
இழந்தோம் என்றா
அழுகிறாய் அம்மா - நீ
இழந்திருப்பது உன் மகனை
நாங்கள் கண்டதோ
இழந்த வாழ்வை
அவளின் கண்ணீரில்
விறகுகள் கூட
வேர் விடும்
நாம்
சருகுகள்
சற்றே சிந்திப்போம்

14.
*கல்லறையில் அடக்கம்*
இறந்தோர் கூடி
உயிருள்ளவரை
அடக்கம் பண்ணினார்கள்
வெள்ளையடிக்கப்பட்ட

கல்லறைகள்
உயிருள்ள கல்லை பூமியின்
உள்ளே வைத்தது
வான விளிம்புவரை நேசித்தவர்
பூமியின் ஆழத்திலும் அன்பை
வாசிக்க
சென்றாரோ
இயேசுவின் உடலை ஏற்று
பூமி மகரந்தமானது
பிறந்தபொழுது
சத்திரத்தில் இடமில்லை
வாழும் நாளில்
தலை சாய்க்க இடமில்லை
உடலின் அடக்கமோ
அன்னியர் தோட்டத்தில்
தேவமைந்தனுக்கு
இப்படி ஒரு நிலை
கல்லறையருகே
கடக்கும் பொழுது
மெல்ல செல்லுங்கள்
உங்கள் தடங்களின்
மெல்லிய சப்தத்தில்
இயேசுவின் உறக்கம்
கலைந்து விடக்கூடும்

15.
இயேசு உயிர்த்தார்
விலக்கப்பட்ட கல்லை
புதைத்தார்கள்
முளைத்தெழுந்தது
மூலைக்கல்
மூன்றாம் நாள்
முன்றாம் நாள் - கானாவூரில்
நீர் இரசமானது -
முன்றாம் நாள் - கல்வாரியில்

இயேசு கிறிஸ்துவானார்
உயிர்த்தது கிறிஸ்துவம்
உதிர்த்த குருதியாலும்
உதிராத உறுதியாலும்
இயேசு உயிர்த்தார் - இது
பொய்யில் பூத்த நிஜம்
கடத்தப்பட்டதாக யூதஅறிவிப்பு -
இது
நிஜத்தில் மலரும் பொய்
தென்னை மரத்தின்
கீற்று விழுந்தது
–
அது
விழ்ச்சியன்று வளர்ச்சி
அஸ்தமிப்பாய் என்றுதான்
சிலுவையில்
அறைந்தார்கள் உன்னை
ஆனால் நீ
விடியலை இனங்காட்டும்
விடிவெள்ளி ஆனாய்
விண்ணரசின் கீதம்
மண்ணில் ஒலித்தது
அல்லேலுயா!
அல்லேலுயா!
இம்மைக்கு மறுமைக்கும்
இனிய வாழ்விற்க்கும்
இன்றியமையாத இறையே
இயேசுவே
இன்றும் தேடுகின்றேம்
கல்வாரியில் உன்
பாதசுவடுகளை….

**அ.அல்போன்ஸ்**

**பெங்களூர்.**